மாவட்டக் கழகச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை!

## மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்தியசாய்நாதன் மேற்பார்வையில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்கள் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளின் 10 பாகங்களில் 26.09.2026 சனிக்கிழமை காலை 10.30 மணியளவிலும், மாலை 4.00 மணியளவிலும் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்கு சேகரிக்க வருகிறார்!



### சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| வ.எண் | நேரம் | பாகம் எண் | பிரச்சாரம் மேற்கொள்ளும் ஊராட்சி / இடம் |
|---|---|---|---|
| காலை 10.30 மணி முதல் | | | |
| 1 | 10.30 மணி | 7 | புழுதிவாக்கம் ஊர் பகுதி |
| 2 | 10.50 மணி | 7 | புழுதிவாக்கம் கூட்ரோடு |
| 3 | 11.00 மணி | 36 | சித்தாலமங்கலம், மாரியம்மன் கோவில் அருகில் |
| 4 | 11.15 மணி | 37 | அண்டவாக்கம் ஊர் பகுதி |
| 5 | 11.30 மணி | 38 | அண்டவாக்கம் செந்தமிழ் நகர் |
| 6 | 11.40 மணி | 57 | புதுப்பட்டு பேருந்து நிலையம் அருகில் |
| 7 | 12.00 மணி | 58 | புதுப்பட்டு பசும்பூர் |
| மாலை 4 மணி முதல் | | | |
| 8 | 4.00 மணி | 33 | வையாவூர் மெயின் ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் |
| 9 | 4.15 மணி | 34 | வையாவூர் புளியமரம் அருகில் |
| 10 | 4.30 மணி | 35 | வையாவூர் மாம்பட்டு |
| 11 | 4.45 மணி | 9 | குன்னங்குளத்தூர் பிள்ளையார் கோயில் அருகில் |
| 12 | 5.00 மணி | 36 | சூரை, அம்மிணி அம்மன் கோவில் அருகில் |

மேற்கண்ட ஊராட்சிகளில் அந்தந்த பாகங்களுக்கு உட்பட்ட உள்ளூர் நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளை சார்ந்த நிர்வாகிகள் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சிகளில் வாக்காளர்களை பெருமளவில் கலந்து கொள்வதற்கு உண்டான பணிகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.
சென்னை கிழக்கு மாவட்ட தேர்தல் பணிக்குழு

கழகத் தலைவர் இல்லத்தில் இன்று துறைமுகம் 57 வது வட்டக் கழகச் செயலாளர்

## ஜி.ராமமூர்த்தி இல்லத் திருமண விழா: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை! மேயர் பிரியா ராஜன் - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, செப். 25

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 57 வது வட்டக் கழகச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி (நினைவில் வாழும்) ஆர்.மகா ஆகியோரின் புதல்வர் ரா.கவியரசனுக்கும், சென்னை, என்.காளிதாஸ் (நினைவில் வாழும்) கே.சசிகலா ஆகியோரின் புதல்வி கா.சங்கீதாவிற்கும் திருமண விழா இன்று (25.09.2026 வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு மேல், ஆழ்வார்பேட்டை,



சித்திரஞ்சன் சாலையில் உள்ள கழகத் தலைவர் அவர்கள் இல்லத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தனது திருக்கரங்களால் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண வரவேற்பு விழா வருகிற (01.10.2026 வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, வால்டாக்ஸ் ரோடு, முதல்வர் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு விழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர் மற்றும் இரா.நரேந்திரன், பி.ஸ்ரீராமுலு, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், என்.பி.எம்.சேக் அப்துல்லா, பா.ஜெகதீஷ், ஏ.பி.எஸ்.செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், தேவஜவகர், எம்.இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், நா.ரஞ்சித் விஜயாலயன், எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், ஆர்.மாரி, பி.கர்ணா, டி.கே.கலைவாணன்,

மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், டி.சத்ஷ்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.ராஜா (எ) கதிரவன், ம.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அப்ரஞ்சி, மா.முத்துக்குமார், நா.சுந்தரம், எஸ்.சந்தியாகு, வி.சந்தனாலட்சுமி, சி.பா.ஜெயராமன், வானவில் விஜய், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, நா.துலுக்காணம், பி.உதயசங்கர், புரசை ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், டி.பெரோஸ்கான், ஆர்.எஸ்.சித்திக், வி.பரிமளம், ரங்கீலா ராஜேஷ் ஜெயின், எல்.தாஹாநவீன், டி.எஸ்.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.எஸ்.தமிழரசன், எம்.கண்ணன், எம்.சுதாகர், எம்.தினேஷ், ஆர்.பிரபு, வி.சச்சின், எம்.வல்லரசு, என்.ஸ்ரீகாந்த் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



மதுராந்தகம் இடைத்தேர்தலையொட்டி கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கருணாகர சேரி ஊராட்சி பூத் 12 இல் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், வட்ட செயலாளர்கள் ஜி.ஏழுமலை, ஆர்.ஏ.எம். சசிகுமார், கி.தேவன், ஆர்.ராஜன், ஊராட்சி கழக செயலாளர் ஜி. நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மதுராந்தகம் தொகுதி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், ஜே.ஜே.எபினேசர், ஆகியோர் ஆலோசனைபடி 12வது வார்டு உறுப்பினர் டெல்லி பாபு தலைமையில் மண்டலக்குழு தலைவர், 38வது வட்ட கழக செயலாளர் நேதாஜி யு.கணேசன், 38(அ) வது வட்ட கழக செயலாளர் எஸ்.எல்.சுந்தர் ஆகியோர் முன்னிலையில் இருளர் குடியிருப்பு, கர்ணாகரச்சேரி பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்க்கு வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கப்பட்டது. உடன் எஸ்.சரவணகுமார், ஜி.ராஜா, சசிகுமார், ப.தேவராஜ், ஏ.ஆனந்தன், எல்.சந்திரசேகர், எம். லோகநாதன், எஸ்.கோவிந்தராஜ், ப.தாமோதரன், எஸ்.கமரூதீன், எஸ்.குமரன் உள்ளிட்ட கழகத்தின் வாக்கு சேகரித்தனர்.

# கட்டமைக்கப்பட்ட விஜய்யின் மாய பிம்பம் - உடைந்து உண்மை முகம் வெளிவருகிறது!

தொட்டுப் பார்த்தால் இரத்த நிறமாம்; புட்டுப் பார்த்தால் மொத்தமும் புழுவாம்!” என்ற சொலவடை அத்திப் பழத்தைவிட விஜய் ஆட்சிக்குத்தான் மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

வேலை இல்லையா? வேலை வரும். விவசாயக் கடனா? தள்ளுபடி. பெண்களின் குடும்பச் சுமையா? மாதம் ரூ.2,500 கிடைக்கும். பேருந்துக் கட்டணமா? தமிழ்நாடு முழுவதும் பெண்களுக்கு இலவசப் பயணம். மின்கட்டணச் சுமையா? அனைவருக்கும் 200 யூனிட் இலவசம். சமையல் எரிவாயு விலை அதிகரிப்பா? அனைத்துக் குடும்பங்களுக்கும் ஆண்டுக்கு ஆறு சிலிண்டர் இலவசம். மருத்துவச் செலவா? ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.25 இலட்சம் காப்பீடு. ஊழலா? ஒழித்துவிடுவோம். மாநில உரிமையா? விட்டுக்கொடுக்க மாட்டோம் என விஜய் கையில் ஏதோ மந்திரக்கோல் இருப்பது போன்ற தோற்றத்தைத் தேர்தல் பிரச்சாரத்தின் போது த.வெ.க. உருவாக்கியது.

மாற்று அரசியல்”, “ஊழலற்ற ஆட்சி”, “தூய சக்தி”, “மக்களின் தலைவர்”, “தாய்மாமன்” என்று த.வெ.க-விற்கும் விஜய்க்கும் சமூக ஊடகங்களில் பிரம்மாண்ட பிம்பம் கட்டமைக்கப்பட்டது. ஆனால், தேர்தலில் பேசியதையும் ஆட்சியில் செய்வதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அந்தப் பிம்பத்தின் ஜிகினா தாள்கள் ஒவ்வொன்றாக உரிந்து உண்மை முகம் வெளியே தெரிகிறது.

த.வெ.க. தனது தேர்தல் அறிக்கையில் ஐந்து ஏக்கர் வரை உள்ள விவசாயிகளின் கூட்டுறவுப் பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்வதாகப் பிரச்சாரம் செய்தது; ஆட்சிக்கு வந்த பின் பல எதிர்ப்புகள் வந்த பின்பும் கூட கடன் தள்ளுபடியை ரூ.75,000 என்ற உச்சவரம்புக்குள் சுருக்கிவிட்டது. கொள்முதல் விலை நெல்லுக்கு குவிண்டால் ரூ.3,500, கரும்புக்கு டன் ரூ.4,500 என்றவர்கள், ஆட்சிக்கு வந்ததும் நெல்லுக்கு ரூ.2,600-ரூ.2,750, கரும்புக்கு ரூ.4,000 என்று முடித்துக்கொண்டார்கள்



**சைதை சாதிக்**
(கழக செய்தி தொடர்பாளர்)

அதேபோல், பெண்களை “மதிப்புமிகு மகளிர்” என்று அழைத்து மாதம் ரூ.2,500 வழங்குவோம் என்றார்கள்; ஆட்சிக்கு வந்த பின்பு, அத்திட்டத்தை உடனே செயல்படுத்த வாய்ப்பில்லை என்று பல்டி அடித்தது. இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, மாதம் ரூ.1,000 என்ற பழைய தொகையைக் கொடுத்து அவகாசம் கேட்டு காலம் கடத்துகிறார்கள்.

“வெற்றிப் பயணம்” என்ற பெயரில் அனைத்துப் பெண்களுக்கும் தமிழ்நாடு முழுவதும் கட்டணமில்லா பேருந்துப் பயணம் என்றார்கள்; நடைமுறையில் பேருந்தின் வகை, வழித்தடம், சேவை என அடுக்கடுக்கான நிபந்தனைகள். “அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்” என்றார்கள்; ஆறு சிலிண்டர் மூன்றாகிவிட்டது, அதற்கும் ஆண்டு குடும்ப வருமானம் ரூ.2.5 இலட்சத்துக்குள் இருக்க வேண்டுமென்ற உச்சவரம்பு. பெயரில் மட்டும் மதிப்பு, வெற்றி, சூப்பர் சிக்ஸ்; ஆனால், ஆட்சிக்கு வந்ததும் கால அவகாசம், வரம்பு, எண்ணிக்கையில் வெட்டு.

அதிலும் த.வெ.க. அரசின் ‘சமத்துவ’ அளவுகோல்தான் மிகவும் விசித்திரமானது. மாதம் ரூ.20,833-க்கு மேல் வருமானம் இருந்தால் ஒரு குடும்பத்துக்கு இலவச சிலிண்டரே கிடையாதாம்! ஆனால், சுமார் ரூ.1,048 கோடி தனிப்பட்ட சொத்தும் குடும்பத்தோடு சேர்த்து ரூ.5,863 கோடி சொத்தும் இருப்பதாக அறிவித்த லால்குடி எம்.எல்.ஏ. லீமா ரோஸ் மார்டினுக்கு அரசு கார் தாராளமாகக் கிடைக்கும்.

மக்களுக்கு நலத்திட்டம் கொடுப்பதற்கு வருமான உச்சவரம்பு, நிதி நெருக்கடி என நாடகம் ஆடும் த.வெ.க. அரசு, எம்.எல்.ஏ-க்களுக்கு கார் வழங்கும் போது மட்டும் எந்த வரம்பையும் வைப்பதில்லை.

அதேபோல், “போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம்” என்று கூறி ஆட்சிக்கு வந்துவிட்டு, இன்று டாஸ்மாக் பார்கள் தனியார்மயமாக்கல், இணையவழி மது முன்பதிவு என ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் போதையின் பிடியில் சிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

தேர்தலில் அள்ளி வீசிய கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள த.வெ.க-வின் முதல் நிதிநிலை அறிக்கை (2026 - 2027) கார்ப்பரேட் சேவைக்கே முன்னுரிமை அளிக்கிறது.

கல்வித்துறைக்கான நிதி வெட்டிச் சுருக்கப்பட்டுள்ளது; மின்சாரம், போக்குவரத்து, மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் “அரசு-தனியார் கூட்டாண்மை (PPP)” முறையைப் புகுத்தி தனியார்மயத்தை தீவிரப்படுத்துகிறது; விவசாயத்துறையிலும் செயற்கை நுண்ணறிவை (AI) உள்நுழைத்து கார்ப்பரேட் சேவையாற்றுகிறது.

அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம் என்று கூறிவிட்டு, திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஓய்வூதியம் மற்றும் பணி ஓய்வுப் பலன்களுக்கான ஒதுக்கீட்டில் சுமார் ரூ.14,003 கோடியை வெட்டியுள்ளது.

தேர்தலுக்கு முன்பு “நண்பா, நண்பீஸ்!” என்று இளைஞர்களைக் கட்டியணைத்த விஜய், அவர்கள் அரசைக் கேள்வி கேட்டதும் அடக்குமுறைகளை ஏவுகிறார். இடதுசாரிகளும் சி.ஜே.பி-யும் நடத்தும் போராட்டங்களில் மாணவர்கள் பங்கேற்பதைத் தடுக்க ஒரு சுற்றறிக்கை; குஜிலியம்பாறையில் சி.பி.ஐ.-சி.பி.எம். செயல்பாடுகளைக் கண்காணிக்க இன்னொரு சுற்றறிக்கை. தேர்தலுக்கு முன்பு மாணவர்கள் நண்பர்கள்! ஆட்சி அமைக்க உதவியபோது சி.பி.ஐ.-சி.பி.எம். தோழமைக் கட்சிகள்! ஆட்சிக்கு வந்த பின்போ, இளைஞர்களைப் போராட்டத்திலிருந்து விலக்கவும் இடதுசாரிகளைக் கண்காணிக்கவும் அதிகாரிகள் ஏவப்படுகிறார்கள். எதிர்ப்பு எழுந்ததும் இரண்டு சுற்றறிக்கைகளும் திரும்பப் பெறப்பட்டன.

அதேபோல், தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சிக்கு வந்து இந்த நூறு நாட்களில் ஏழு லாக்கப் படுகொலைகள் நடந்துள்ளன. போராடும் ஜனநாயக சக்திகளை கண்காணிப்பது, பத்திரிகையாளர்கள் மீது அடக்குமுறைகள் ஏவுவது, அதிகரிக்கும் கொட்டடிப் படுகொலைகள் ஆகியவை த.வெ.க. ஆட்சியில் போலீசு ராஜ்ஜியம் நிறுவப்பட்டு வருவதைக் காட்டுகின்றன.

தூய்மைப் பணியாளர்களிடமும் இதே இரட்டை வேடம். கடந்த தி.மு.க. ஆட்சியில், தனியார்மயத்தை எதிர்த்துப் போராடிய தூய்மைப் பணியாளர்களை பனையூருக்கு அழைத்து ‘ஆதரவு’ தெரிவித்தார் விஜய். ஆனால், த.வெ.க. ஆட்சிக்கு வந்ததும் 12 மாநகராட்சிகளின் திடக்கழிவுப் பணிகளை அரசு - தனியார் கூட்டாண்மைக்கு திறக்க ஆய்வு டெண்டர் விடப்பட்டது

த.வெ.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து இதுவரை 10-க்கும் மேற்பட்ட ஆணவப் படுகொலைகள் அரங்கேறியுள்ளன. “ஆட்சிக்கு வந்தால் ஆணவப் படுகொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் இயற்றுவோம்” என்ற வாக்குறுதியை தற்போது வரை த.வெ.க. அரசு நிறைவேற்றவில்லை. தமிழ்நாடு முழுவதும் தலித் மக்கள் மீதான சாதிவெறியாட்டங்கள் கட்டவிழ்த்து விடப்படுவதை கைகட்டி வேடிக்கை பார்க்கிறது.

அண்மையில், “அண்ணல் அம்பேத்கர் அயலக உதவித்தொகை” கடந்த ஐந்து மாதங்களாக வரவில்லை என மலேசியாவில் பயிலும் தமிழ்நாட்டு ஆராய்ச்சி மாணவர் பாரதிதாசன் அம்பலப்படுத்தியிருந்தார். இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மாணவரையே குற்றவாளியாக்கும் போக்கை த.வெ.க. அரசு கையாண்டது; அந்த வேலையை அமைச்சர் வன்னியரசு முன்னின்று செய்தார்.

மறுபுறம், ஆதிதிராவிடர் நலத்துறைக்கு “சமூக நீதித் துறை” என்று பெயர் மாற்றி பார்ப்பனிய சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு த.வெ.க. அரசு துணைபோகிறது.

பெண்கள் பாதுகாப்பிற்காக “சிங்கப்பெண்” படை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆயுதப் படை பெண் போலீசே கூட்டுப்பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட அவலம் அரங்கேறியுள்ளது. குழந்தைகள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் தீவிரமடைந்து வருகிறது. பாலியல் வன்கொடுமை, போக்சோ வழக்குகளில் த.வெ.க. நிர்வாகிகளே அடுத்தடுத்து கைதாகின்றனர்.

ஆட்சிக்கு வரும் முன்பு கன்னியாகுமரி ஐ.ஆர்.இ.எல். (IREL) அணுக்கனிமச் சுரங்கத் திட்டத்தை எதிர்த்த விஜய், தனது ஆட்சியில் அத்திட்டத்திற்கான 1,144.06 ஹெக்டேர் நில ஒதுக்கீட்டின் செல்லுபடிக் காலத்தை ஓராண்டு நீட்டித்துள்ளார். தேர்தலுக்கு முன்பு கடலோர மக்களின் அச்சம் கண்ணுக்குத் தெரிந்தது; ஆட்சிக்கு வந்ததும் மோடி அரசு கூறும் ‘தேசியப் பாதுகாப்பு’, ‘போர்த்தந்திர முக்கியத்துவம்’ கண்ணை மறைத்துவிட்டதா? அனைத்தும் கார்ப்பரேட் சேவை!

பரந்தூர் விமான நிலையத் திட்டம் மக்கள் போராட்டத்தின் காரணமாக ரத்து செய்யப்பட்டிருப்பது மக்களின் வெற்றி. ஆனால், அத்திட்டத்திற்காகக் கையகப்படுத்திய நிலங்களை மீண்டும் அம்மக்களிடம் ஒப்படைக்காமல் அங்கு வேறு திட்டத்தைக் கொண்டுவருவோம் என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம்?

இந்த நூறு நாட்களின் மொத்தச் சித்திரத்தையும் வைத்துப் பார்த்தால் 2013-14-இல் மோடியைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்ட பிம்ப அரசியலுடனான ஒற்றுமை தெளிவாகும். அப்போது “ஊழலற்ற தலைவர்”, “வளர்ச்சியின் நாயகன்”, “வேலைவாய்ப்பின் மீட்பர்” என்று மோடியை முன்னிறுத்தினார்கள்; இன்று “மாற்று அரசியல்”, “ஊழலற்ற தலைவர்”, “மக்களின் மீட்பர்” என்று விஜய்யைச் சந்தைப்படுத்துகிறார்கள்.

ஒற்றுமை விளம்பரத்தில் மட்டும் இல்லை; போலி வாக்குறுதிகள், பொய் பிரச்சாரங்கள், மக்கள் பிரச்சினைகளில் கள்ளமௌனம் காப்பது, அரசை எதிர்ப்பவர்கள் மீது கண்காணிப்பு - அடக்குமுறை, பொதுத்துறையில் தனியார்மயம், கார்ப்பரேட்டுக்கு சிவப்புக் கம்பளம் என அனைத்திலும் இருக்கிறது.

விவசாயி முதல் மீனவர் வரை, பெண்கள் முதல் அரசு ஊழியர் வரை அனைவருக்கும் கொடுத்த வாக்குறுதிகளில் ஏமாற்று, மோசடி செய்த விஜய்.. ஆம் இவர் ஒரு மோசடி முதலமைச்சர்..